2013 ஏப்ரல் 18]

பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

260—

பால் பண்ணை

***5269—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் கூட்டுறவு பால் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். மேட்டூர் தொகுதியிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்தில் சேலம் பால் பண்ணை உள்ளதால், மேலும் ஒரு பால் பண்ணை அமைக்கும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே 663 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அதில் குறிப்பாக மேட்டூர் தொகுதியிலே, கொளத்தூர், மேச்சேரி, நங்கவல்லி ஒன்றியங்களிலே*

82 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றோடு சங்ககிரி, எடப்பாடி, தாரமங்கலம் போன்ற இடங்களில் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களை இணைத்தால், 300-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதனடிப்படையிலும், சேலம் மாவட்டம் பெரிய நிலப்பரப்பை உடையதாலும், மேட்டூரைத் தலைமையிடமாகக் கொண்டு பால் பண்ணை அமைக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மேட்டூர் பால் சேகரிப்புக் குழு அலுவலகம், கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகம் மற்றும் பால் விற்பனை அலுவலகம் ஆகியவை தற்போது வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில், மொத்த பால் கொள்முதல் 32,250 லிட்டர் ஆகும். அந்தத் தொகுதியில் 9 பால் குளிர்விப்பான்கள் உள்ளன. அங்கு பால் கொள்முதல் அதிகமாகிக் கொண்டிருக்கிற நிலையில், மேற்கொண்டு பால் குளிர்விப்பான்கள் தேவை என்பதை அறிந்து, இரண்டு 5,000 லிட்டர் பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். அதற்குண்டான பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே அந்தத் தொகுதியில் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிர்விப்பான் இருக்கிறது. மேலும், அதை 5,000 லிட்டர் கொள்ளளவில் அதிகப்படுத்துகின்றவிதமாக அமைக்கப்பட இருக்கின்றது. இந்தக் குளிர்விப்பான்களுடைய கட்டடங்கள் ஒன்றியத்தின் மூலமாகக் கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமெனில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டிக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2013 ஏப்ரல் 18]

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரியில் பயிலும் மாணவர்களுடன், கூட்டு முயற்சியில் ஆவின் பாலகம் நிறுவப்படும் என்ற புதுத் திட்டத்தினை இந்த அரசு கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளது. அனைத்துக் கல்லூரிகளிலும் பாலகங்கள் துவக்கப்படுமா என்பதையும், குறிப்பாக எனது மேட்டூர் தொகுதியிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்களுடன் இணைந்து இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு என்ன உதவிகள் அளிக்கும் என்பதை தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்முனைவோர் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக, அனைத்துக் கல்லூரிகளிலும் இருக்கின்ற மாணவர்களை அழைத்து, அவர்களுக்கு ஆவின் நிறுவனத்தின் சிறப்பைப் பற்றியும், ஆவின் நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பால் பொருட்களைப் பற்றியும் எடுத்துச்சொல்லி, இந்தத் தொழில் ஒரு சாதாரண தொழிலாகத் தற்போது தொடங்கப்பட்டாலும், பிற்காலத்திலே நீங்கள் சுயதொழில் தொடங்குவதற்கு இது ஏதுவாக இருக்கும் என்று கருத்துரை வழங்கப்பட்டு வருகிறது. இதனால், அனைத்துக் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்கள் தற்போது ஆவின் பாலகங்களை அமைக்க முன்வருகிறார்கள். சில கல்லூரிகளில் ஆவின் பாலகங்கள் தொடங்கப்பட்டு, மாணவர்களால் இன்று விருப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளுகின்ற ஒரு தொழிலாக அமைந்து கொண்டிருக்கின்றது. அதனடிப்படையில், இன்றைய அறிக்கையில்கூட, அனைத்துக் கல்லூரிகளிலும் ஆவின் பாலகங்கள் திறக்கப்படும் என்ற ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. ஆகையால், அனைத்துக் கல்லூரிகளிலும் ஆவின் பாலகங்கள் திறக்கப்படும். அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது தொகுதியில் ஆவின் பாலகம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்பாரேயானால், அதை

அமைத்துத் தருவதற்கு ஆவின் நிறுவனம் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத்தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 261, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

261—

கால்நடை மருத்துவமனைக் கட்டடம்

***13296—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, மருதம்பட்டி ஊராட்சி, பின்னங்குடிப்பட்டியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, மருதம்பட்டி ஊராட்சி, பின்னங்குடிப்பட்டியில் செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவமனைக்கு கட்டடம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அங்கே கட்டடம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்டவுடன், அங்கே கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தால் அழியாத மொழி நம் தமிழ் மொழி; அதுபோல, காலத்தால் நீடித்து நிலைத்திருக்கும் அழியாப் புகழ்*